பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 23 வியாழக்கிழமை 09.10.2025 கதிர் 333

## இனி இது ரகசியம் அல்ல!



சிங்கள பௌத்த பேரினவாதம் தமது காவலர்களைப் பாதுகாப்பதில் எப்போதும் தீவிரமாக இருந்து வந்திருக்கிறது. அதனடிப்படையில் இப்போது முன்னாள் அரசுத் ☞2

## ஜெனீவாத் தீர்மானம் தொடர்பில் ஆளும்தரப்பு நழுவிச் செல்கிறது

### சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கை குறித்து ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்ன என்று நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு , பதிலளிக்க பிரதமர் ஹரிணி இரண்டுவார கால அவகாசம் கோரிய நிலையில், ஜெனீவாவில் தாம் எடுத்த நிலைப்பாடு தொடர்பில் பதிலளிக்க முடியாமல் இருப்பதனாலேயே இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்காமல் ஆளும்தரப்புநழுவிச்செல்கின்றது என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது பிரதமருடனான கேள்வி ☞6

## பொதுப் போக்குவரத்துக் கட்டணம் நவ. 30 முதல் வங்கி அட்டை மூலம்

நவம்பர் 30 முதல் பொது போக்குரவத்தின்போது பயணக்கட்டணத்தை வங்கி அட்டை ஊடாக செலுத்த முடியுமான வகையில் வசதி செய்துகொடுக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமைஇடம்பெற்ற போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு குறைநிரப்புத் தொகை பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுக்கையில்,

பஸ் பற்றுச்சீட்டு மூலம் கொள்ளையடிப்பது என்பது பிரபல்லியமான ☞2

# பொய்களாலும் ஏமாற்று வேலைகளாலும் மக்களைத் தவறாக வழிநடத்தக்கூடாது

## ஆளும்தரப்பு மீது எதிர்க் கட்சித் தலைவர் சஜித் சீற்றம்

ஆளும்தரப்பு பெரும்பான்மை அதிகாரத்தை வைத்துக் கொண்டு, பொய்களாலும் ஏமாற்று வேலைகளாலும் மக்களை தவறாக வழிநடத்தக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாசதெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற போக்குவரத்து, நெடுஞ் சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் குறை நிரப்புத் தொகை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நமது நாட்டு மக்கள் பொய்கதுளால் எப்படி ஏமாற்றப்பட்டு உதவியற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர் என்பதைப் பார்க்கும்போது, பலவிடயங்களைசுட்டிக்காட்டமுடியும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50வீதம் பங்களிக்கும், 40 இலட்சம் பேருக்குதொழில்வாய்ப்பைப்பெற்றுத் தரும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறையினர்,உயிர்த்த ஞாயிறு தாக்குதல்,கோவிட்-19 தொற்றுநோய் மற்றும்வங்குரோத்துநிலைகாரணமாக உதவியற்ற நிலையில் இருக்கும் சமயத்தில், அவர்களின் 260,000 க்கும் மேற்பட்ட தொழில் முயற்சிகள் மூடப்பட்டிருக்கின்றன. தற்போதைய ஆளும்தரப்பின் வளமான நாடு, அழகான வாழ்க்கை எனும் கொள்கை அறிக்கையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறையினருக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர். பராட்டே சட்டம் இரத்துச் செய்யப்படும். வட்டி விகிதங்கள் குறைக்கப்படும். வியாபார நடவடிக்கைகளை முன்கொண்டு செல்லதக்க மூலதனம் வழங்கப்படும். கடன் உதவி வழங்கப்படும் என்று தற்போதைய ஆளும்தரப்பு வாக்குறுதி வழங்கி இருந்தாலும், இன்று அது எதுவும் நடக்கவில்லை ☞2

## வகுப்பறைகளில் ஆறில் ஒருவர் கடும் மனஉளைச்சலால் பாதிப்பு

பாடசாலை மாணவர்கள் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளனர். வகுப்பறையில் உள்ள 6 மாணவர்களில் ஒருவர் கடும் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். இலங்கையில் நாளாந்தம் இளைஞர்களிடையே மன ரீதியான தாக்கம்அதிகரித்துசெல்வதாககளணிபல்கலைக்கழக மருத்துவபீடபேராசிரியர் விசேட வைத்திய நிபுணர்மியுருசந்திரதாச சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக மனநல ஆரோக்கிய ☞2

## ஜெனிவாவில் வாக்கெடுப்புக் கோருவதற்கு ஆளும்தரப்புக்கு முதுகெலும்பு இல்லையா?

### நாமல் ராஜபக்ச கேள்வி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் இலங்கை விவகாரத்தில் வாய்மூலம் எதிர்ப்பு தெரிவித்தபோதும்வாக்கெடுப்பைகோரவில்லை. வாக்கெடுப்பை கோருவதற்கு ஆளும்தரப்புக்கு முதுகெலும்பு இல்லையா? பல நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக உள்ளன. யாரை நீங்கள் மகிழ்விக்கப் போகின்றீர்கள். தமிழ் புலம்பெயர் அமைப்புக்களையா, அல்லது விடுதலைப் புலி ஆதரவாளர்களையா ? ஐ.நா.விவகாரத்தில்இரட்டைவேடம்அணிவதை ஆளும்தரப்பு தவிர்க்க வேண்டும் என லங்காபொதுஜனபெரமுனவின்நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது போக்குவரத்து, ☞2

## சர்வதேச நீதிப் பொறிமுறைக்கான கோரிக்கைத் தவிர்ப்புக்கு எதிர்ப்பு

தமிழர்களுக்கு எதிரான இலங்கை ஆளும்தரப்பின் மீறல்கள் தொடரும் நிலையிலும், சர்வதேச சமூகமானது காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் போன்ற உள்ளகக்கட்டமைப்புக்களை தொடர்ந்து ஊக்குவித்து வருவதாகவும், சர்வதேச நீதிப்பொறிமுறையை ☞6

## எல்லை நிர்ணயத்தைச் செய்த பின்னரே மாகாண தேர்தலா என்பது முடிவில்லை

### சுமந்திரனிடம் இந்தியத் தூதர் தெரிவிப்பு

மாகாணசபைத்தேர்தலை நடத்துவதற்கு முன்னர் எல்லை நிர்ணயம் செய்வதா, இல்லையா என்பது குறித்து ஆளும்தரப்பு இன்னமும் தீர்மானிக்கவில்லை என்றுதெரிவதாகதமிழ்அரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரனிடம் தெரிவித்துள்ள இலங்கைக்கான இந்திய உயராணையர் சந்தோஷ்ஜா, இருப்பினும் இயலுமானவரை ☞6

## 30 இந்திய மீனவர்கள் நேற்றிரவு கைது

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய இந்திய மீனவர்கள் 30 பேர் நேற்றிரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். 4 படகுகளில் மன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று ☞6

## வதந்திகளுக்கு பதிலளிக்கமாட்டேன் பிரதமர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

எமது கட்சியில் இடம்பெறும் பேச்சுக்கள் மற்றும் எடுக்கப்படும் தீர்மானங்கள் பற்றி பலர் பல விடயங்களை குறிப்பிடுகிறார்கள். அவையனைத்தும் வதந்திகள் என்று குறிப்பிட்டுக் கொள்கிறேன். அத்துடன் வதந்திகளுக்கு பதிலளிக்க போவதில்லை. அனைத்து நாடாளுமன்றங்களிலும் நகைச்சுவையாளர்கள் இருந்துள்ளார்கள். இந்த நாடாளுமன்றத்திலும் எதிர்க்கட்சியில் நகைச்சுவையாளர்கள் உள்ளார்கள். அவர்கள் குறிப்பிடும் விடயங்களை கேட்டு கோபமடைய போவதில்லை. மகிழ்ச்சியுமடையோம் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமர்வின் போது போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் ☞6

## இனி இது .....

தலைவர் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பை முழுமையாகத் திருப்பித்தரவேண்டும் என்று வலியுறுத்தி தேரர் ஒருவர் தங்காலையில் பட்டினிப் போராட்டம் தொடங்கியுள்ளார்.

முன்னாள் அரசுத் தலைவர்களுக்கான சலுகைகளை நீக்கும் ஆளும்தரப்பின் தீர்மானத்தை அடுத்து மகிந்தவுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புப்படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. அவருக்கு வழங்கப்பட்டிருந்த இரு குண்டு துளைக்காத கார்களில் ஒன்றையும் அவர் அண்மையில் ஆளும்தரப்பிடம் திருப்பி ஒப்படைத்திருந்தார். அதற்கு முன்னதாக கொழும்பில் விஜேராம மாவத்தையில் அமைந்திருந்த அரச இல்லத்திலிருந்து வெளியேறி தங்காலையில் உள்ள பூர்வீக இல்லமான கார்ல்டன் இல்லத்திற்குச் சென்றிருந்தார்.

இதனை அடுத்து ரத்துபஸ்வல தேரர் என்பவர் மகிந்தவின் பாதுகாப்பு அவரக்குத் திருப்பி ஒப்படைக்கப்படவேண்டும் என்று வலியுறுத்திப் பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளார். தங்காலையில் உள்ள கார்ல்டன் மாளிகைக்கு எதிரே அமைந்துள்ள டி.எஸ். சேனநாயக்க சிலைக்கு முன்னால் பிற்பகல் 1.00 மணியளவில் அவர் தனது போராட்டத்தைத் தொடங்கினார்.

ஒரு காலத்தில் தேசத்திற்கு சேவை செய்த முன்னாள் அரச தலைவரின் பாதுகாப்பை நீக்குவதற்கான முடிவை ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும், இது அவரது பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கிறது என்றும் தேரர் கூறியுள்ளார். திரும்பப்பெறப்பட்ட பாதுகாப்பை மகிந்தவுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மீட்டெடுக்கும் வரை தனது போராட்டம் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேரரின் போராட்டம் எவ்வளவு தூரம் தீவிரமடையும் என்பதைச் சொல்ல முடியாது. ஒருவேளை அவர் நீண்ட நாள்களுக்குப் போராடி பட்டினியால் வாடி மயங்கிச் சரியும் ஒரு நிலை ஏற்பட்டால் அது ஆளும் தரப்புக்கு எதிரான உணர்வுக் கிளர்ச்சிக்கு வழிவகுத்து நிலைமைகளைத் தலைகீழாகப் புரட்டிப் போடும் வல்லமையைக் கொண்டிருக்கும்.

இனவாதத்திற்கு இடமளிக்கமாட்டோம் என்று கூழுரைத்து வரும் ஆளும்தரப்பிற்கு உண்மையான அக்கினிப் பரீட்சை இப்போதுதான் தொடங்கியிருக்கிறது. சிங்கள, பௌத்த பேரினவாதத்துடன் நேரடியாக மோதும் திறனும் வலுவும் அதற்கு உண்டா என்பது இப்போது தெரிந்துவிடும்.

..........................................................

அரசியல்வாதிகளைத் தொடர்ந்து அரச அதிகாரிகள் மீதும் இலஞ்ச, ஊழல் நடவடிக்கைகள் பாயும் என்பதை ஏற்கனவே பல தடவைகள் எதிர்வுகூறியிருந்தேன். அதிலும் முதலில் அரசியல்வாதிகள் ஊழல் செய்வதற்கு உதவியவர்கள் என்று கருதப்படும் அரச ஊழியர்களே இலக்கு வைக்கப்படுகிறார்கள். நேற்று ஒருவர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைதுசெய்யப்பட்டுநீதிமன்றத்தால்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான நிலம் தொடர்பான சந்தேகத்திற்குரிய இழப்பீட்டு மோசடி தொடர்பாக, இழப்பீட்டு அலுவலகத்தின் முன்னாள் பதில் பணிப்பாளர் நாயகம் லஞ்ச ஒழிப்பு ஆணையத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் தற்போது நீதி அமைச்சின் கூடுதல் செயலாளராக பணியாற்றி வருகிறார். அவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

2022 ஆம் ஆண்டு 'அரகலயா' போராட்டங்களில் சேதமடைந்த மகாவலி அதிகாரசபையின் சொத்துக்கு, குறிப்பாக கிரிப்பன்வேவா தளத்திற்கு, இழப்பீடு வழங்கும் நடவடிக்கையின் போது, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்சவுடன் சதி செய்தார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சஷீந்திர ராஜபக்சவுக்கு எதிரான லஞ்ச விசாரணையில் இரண்டாவது சந்தேகநபராக அந்த அதிகாரி அடையாளம் காணப்பட்டுள்ளார். இழப்பீட்டு அலுவலகத்தின் முன்னாள் பதில் பணிப்பாளர் நாயகமாக அவர் பணியாற்றிய காலத்தில், அரச சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தி, 8 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையை அங்கீகரிக்குமாறு அவர் அரச அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்தார் என்று கூறப்படுகிறது.

இருப்பினும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்சவுக்கு உதவினார் என்றும், உடந்தையாக இருந்தார் என்றும் நீதி அமைச்சின் கூடுதல் செயலாளர் செபாலிகா சமன் குமாரி மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கொழும்பு தலைமை நீதிவான் அசங்க போதரகம சந்தேகநபரை தலா 1 மில்லியன் ரூபாய் வீதம் இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க இணங்கினார்..

குற்றம் நிகழ்ந்தபோது இழப்பீட்டு அலுவலகத்தின் பதில் இயக்குநர் ஜெனரலாகப் பணியாற்றிய சந்தேகநபர், பணம் செலுத்துவதைச் செயல்படுத்த அதிகாரிகளிடம் செல்வாக்குச் செலுத்தினார் என்றும், அதன் மூலம் லஞ்சச் சட்டம் மற்றும் பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்ததாகவும் புலனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் இந்த நடவடிக்கையின் மூலம் சந்தேகநபர் தனிப்பட்ட முறையில் நிதி ரீதியாக பயனடைந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றும், பிணை வழங்குவதில் அவரது சேவைப் பதிவு கருத்தில் கொள்ளப்படுவதாகவும் நீதிவான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அதிகாரிகளை மட்டும் இலக்கு வைக்காமல் அதற்கு வெளியிலும் ஊழல் அரச அதிகாரிகள் எப்போது இலக்கு வைக்கப்படப்போகிறார்கள் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

..........................................................

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் மற்றும் அமைச்சர்களின் சொத்துக்கள் குறித்து விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று தெரிகிறது. இவர்கள் தவிர ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களைச் சேர்ந்த 10 பேரின் சொத்துக்கள் குறித்தும் தனித்தனி விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

இந்தச் சொத்துக்கள் பெறப்பட்ட விதத்திற்கு உரிமையாளர்கள் கணக்குக் காட்டத் தவறினால் சட்டத்தின் விதிகளின்படி அவற்றைப் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொய்களாலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முந்தைய ஆளும்தரப்பு அரசுத் தலைவர் தேர்தலை மனதில் கொண்டு பராட்டே சட்டத்தை தற்காலிகமாக இரத்து செய்த போதிலும், கடனில் மூழ்கியிருந்த நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் கடன்களை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கவில்லை. அதன் பிறகு ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை இலக்காகக் கொண்டு, பராட்டே சட்டத்தை அமுல்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்தது. ஆனால் கடனை மறுசீரமைக்கவில்லை. அதனால் கோயபல்ஸ் கொள்கையை யார் பின்பற்றுகிறார்கள் என்பது முழு நாட்டிற்கும் தெளிவாகத் தெரிகிறது

தற்போதைய ஆளும்தரப்பு மிகவும் நியாயமற்ற முறையில் கீழ் நமது நாட்டின் தொழில்முனைவோரை பழிவாங்கி வருகிறது. கோசல விதானாரச்சி 10 ஆண்டுகளுக்கு 38 மில்லியன் கடனைப் பெற்றிருந்தாலும், இன்றுவரை, அவர் 52.4 மில்லியனை செலுத்தியுள்ளார். மொத்தக் கடனான 38 மில்லியனை அடைக்க அவர் மேலும் 80 மில்லியனைக் கோர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். மொத்த தொகை 137 மில்லியன் ஆகும். இந்தத் தரவுகள் அனைத்தையும் சபைக்கு சமர்ப்பிக்கிறேன். இந்த அநீதிகள் அனைத்தும் தற்போதைய ஆளும்தரப்பாலேயே முன்னெடுக்கப்படுகின்றன. ஆளும்தரப்பு இன்று வாக்குறுதியளித்ததைச் செய்யாதிருக்கிறது

நாட்டில் இணையவழி கடன் மாபியா நடந்து வருகிறது. இது குறித்த விடயங்களை எதிர்க்கட்சி நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் சுட்டிக்காட்டியுள்ளது. இந்தக் கடன் மாபியா முன்னெடுப்புகள் மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாது, தமது தனிப்பட்ட செல்வத்திலிருந்து அதிகப்படியான வட்டிக்கு கடன் வழங்கி, அதன் மூலம் இந்தக் கடன்களை நியாயமற்ற முறையில் அறவிட்டு வருகின்றனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட ஆளும்தரப்பு, இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காதிருப்பது பாரிய பிரச்சினையாகும். சாதாரண உழைக்கும் மக்களின் பணத்தை இவர்கள் சுரண்டுகின்றனர்

வாகனமொன்றை கொள்வனவு செய்து, அதற்கு லீசிங் எடுத்து, லீசிங் காலாவதியான பிறகு அதை மீண்டும் பயன்படுத்துவதற்கான சட்டத்திற்குள் முன்னெடுக்கப்பட வேண்டும். நியாயமான நடைமுறையாக இது அமைந்து காணப்படவேண்டும் என்றாலும், 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தை மீறி, லீசிங் நிறுவனங்கள், பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து, இந்தச் சட்டத்தை மீறி, பொலிஸ் மா அதிபர் வழங்கிய பரிந்துரைகளையும் கிடப்பில் போட்டு, குண்டர்களையும் சண்டியர்களையும் பயன்படுத்தி வாகனங்களை வலுக்கட்டாயமாக கைப்பற்றி வருகின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்கு இந்த ஆளும்தரப்பிடம் தீர்வுகள் இல்லை

கல்வியை நவீனமாக்கவேண்டும், அபிவிருத்தியடைந்த சமூகத்தில் சிறார்கள் தலைமுறையை அதற்கேற்ப உருவாக்குவது போல, கடந்த காலத்தை மறந்து விடவும் முடியாது. அரச காலத்தில் நமது நாட்டின் பெருமைகளை குழந்தைகள் அறிய வேண்டும். ஏகாதிபத்திய சக்திகள் இந்த நாட்டை ஆதிக்கத்துக்குட்படுத்திய போது, அந்த ஏகாதிபத்தியத்தை தோற்கடிக்க இந்த நாட்டின் மன்னர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் வரலாற்றை அழித்து விட முடியாது. திறமை, ஆற்றல் மற்றும் தொழில்முறை திறன் கொண்ட இளம் தலைமுறையை உருவாக்குவதில் நமது அடையாளத்தைப் பாதுகாக்கும் வகையில் வரலாறு கட்டாய பாடமாக அமைந்து காணப்பட வேண்டும் என்றார்.

## வகுப்பறைகளில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினத்தை முன்னிட்டு நேற்று புதன்கிழமை இலங்கை மன்றத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகளாவிய தரவுகளுக்கமைய 8 பேரில் ஒருவர் மனநல சிக்கலுடன் வாழ்ந்துவருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது அவர்களின் உடல் ஆரோக்கியத்தையும், மற்றவர்களுடன் தொடர்புகொள்ளும் விதத்தையும், அவர்களின் வாழ்வா தாரத்தையும் பாதிக்கக் கூடும். களனி பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடமும், மனநல பிரிவும் இணைந்து முன்னெடுத்திருந்த ஆய்வில் பாடசாலை மாணவர்கள் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

10 மற்றும் 13 ஆம் தரங்களில் கல்வி பயிலும் 1045 பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்டு மேற்படி விசேட ஆய்வினை முன்னெடுத்திருந்தோம். இதன்போது அவர்களில் 24 சதவீதமானோர் விபத்துகள் உள்ளிட்ட அபாயகரமான நிலைமைகளால் ஏற்பட்டிருந்த மனநல சிக்கலால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். உலக நாடுகளில் இளைய சமுதாயத்தினரிடையே அபாயகரமான நிலைமைகளால் ஏற்படக்கூடிய மனநல பாதிப்பு 10 தொடக்கம் 13 சதவீதமாக காணப்படுகின்ற போதிலும் இலங்கையில் 24 சதவீதமானோர் அந்தப் பாதிப்புக்குள்ளாகியுள்ளமை கவனம் செலுத்தவேண்டிய விடயமாக உள்ளது.

மேலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சுமார் 60 சதவீதமானோர் அபாயகரமான நிலைமைகள் அன்றி வேறு காரணிகளால் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். வகுப்பறையில் உள்ள 10 மாணவர்களில் ஒருவர் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். அந்த வகையில் இலங்கையில் நாளாந்தம் இளைஞர்களிடையே மன ரீதியான தாக்கம் அதிகரித்து செல்வதைக் காணமுடிகின்றது. பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கிடையிலான தொடர்பாடல் இன்மை, வன்முறைகளுக்கு ஆளாகும் சிறார்களின் மனநிலையை சீரமைக்காமை போன்ற காரணங்கள் இத்தகைய தொரு நிலை உருவாகியுள்ளது. இக்காலத்தில் உள்ள சிறுவர்களிடம் எதிர்வினைகளை தாங்கக் கூடிய பக்குவம் மற்றும் அதனோடு இணைந்து செயற்படக்கூடிய ஆற்றலும் குறைவாக உள்ளமையால் மன உளைச்சலால் பாதிக்கப்படுகின்றனர்.

கடந்த 25 வருடகாலப்பகுதியில் மனநலம் தொடர்பாக நாட்டில் முன்னெடுக்கப்பட்டிருந்த 33 ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில், வயது வந்தவர்களில் 30 வீதமானோர் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதுடன், 39 வீதமானோர் கடுமையான மன நோய்க்கு ஆளாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது என்றார்.

இந்நிகழ்வில் கலந்துக் கொண்ட சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்ததாவது:

ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 10 உலக மனநல ஆரோக்கிய தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அந்தவகையில் இவ்வருடம் அபாயகரமான மற்றும் அவசர நிலைமைகளின்போது அனைவருக்கும் மனநல சேவை' என்ற விசேட கருப்பொருளுக்கமைய கொண்டாடப்பட உள்ளது. நாட்டில் உள்ள சுமார் 10 சதவீதமானோர் வெவ்வேறு விதமான மனநல நோய்களுக்கு ஆளாகியுள்ளனர்.

20 சதவீதமானோர் கடுமையான மனநல நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. மனநல சேவைகளுக்கு உரிய அங்கீகாரமும் முன்னுரிமையும் வழங்கப்படவேண்டும். 2024 ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் 37 ஆயிரம் பேர் மன நல பிரிவில் சிகிச்சைப் பெற்றுள்ளனர். தற்கொலைக்கும் மன உளைச்சலே முதன்மைக் காரணமாக உள்ளது என்றார்.

## பொதுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயமாகும். இலங்கையில் பஸ் தொழிலை செய்ய முடியாமல் இருப்பதற்கு இது பிரதான காரணமாகும். பஸ் தொழில் மூலம் எந்த வருமானத்தையும் வியாபாரிக்கு பெற முடியாத நிலை. அதனால் பஸ் பயணக்கட்டணத்தை அட்டை மூலம் செலுத்தும் முறைமையை அறிமுகப்படுத்துமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் மூலம் எங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

போக்குவரத்து அட்டை தயாரிப்பதற்கு அதிகமானவர்கள் நடவடிக்கை எடுத்துவந்திருந்தனர். அது கஷ்டமான விடயமாகும். அது பழைய முறையாகும். அதனால் நவம்பர் 30 ஆம் திகதியாகும்போது இலங்கையில் தற்போது பஸ் பற்றுச்சீட்டு இயந்திரம் இருக்கும் பஸ் வண்டிகளில் யாருக்கு வேண்டுமானாலும் தங்களிடம் இருக்கும் இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற வங்கி அட்டையை பயன்படுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள முடியுமான வேலைத்திட்டத்தை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

அதேபோன்று பெண் சாரதி மற்றும் பெண் நடத்துனர்களை நவம்பர் மாதம் இறுதியாகும்போது இணைத்துக்கொள்ள இருக்கிறோம். அது தொடர்பான நேரமுகப்பரீட்சை தற்போது நடைபெற்று முடிந்துள்ளது என்றார்

## ஜெனிவாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் 2025 குறைநிரப்புத் தொகை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்சக்கள் தமது வீடுகளுக்குச் செல்வதற்காக வேஅதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிப்பதாக குற்றஞ்சாட்டியவர்கள் இன்று ஆட்சியில் உள்ளார்கள். ஆளும்தரப்பு அதிவேக வீதிகட்டமைப்பை அமைக்க வேண்டும் என்ற நிலைக்கு வந்துள்ளது. அதிவேக வீதியை அமைத்தால் நாய்கள், விலங்குகளுக்கு வீதியை கடக்க முடியாத நிலைமை ஏற்படும் என்றே அன்று கூறினீர்கள். இந்த வீதிகள் தங்கத்திலா நிர்மாணிக்கப்படுகின்றது என்றும் கேட்டீர்கள். ஆனால் இப்போது உங்களின் தலைவர் எஞ்சியுள்ள அதிவேக வீதியை அமைக்க நடவடிக்கை எடுக்கின்றார். அன்று நீங்கள் தடைகளை ஏற்படுத்தியிருக்காவிட்டால் இப்போது அரசுத் தலைவர்க்கு அதிவேக வீதிகளை திறந்து வைத்திருக்கவும் முடியும்.

ஆளும்தரப்பின் முன்னேற்றம் தொடர்பில் கேள்விகள் எழுகின்றன. ஒவ்வொரு அமைச்சும் இதுவரையில் அடைந்துள்ள முன்னேற்றம் என்ன? கடந்த வரவு செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நிதியில் எவ்வளவு நிதி செலவிடப்பட்டுள்ளது. மக்கள் அடைந்த நன்மை என்ன என்பதனையும் கூற வேண்டும். கடந்த காலங்கள் தொடர்பில் பேசிக்கொண்டிருக்காமல் வேலைத்திட்டங்கள் பாருங்கள்.

ஒவ்வொரு வாரமும் புது விடயங்கள் பேசப்படுகிறது. இப்போது பொலிஸ் ஆணைக்குழு தொடர்பான பிரச்சினைகள் எழுந்துள்ளன. அன்று பொலிஸ் ஆணைக்குழு வேண்டும். அது சுயாதீனமாக இருக்க வேண்டும் என்று கூறிய நீங்கள் இப்போது சுயாதீனத்துவத்தை நீக்கி அதன் அதிகாரத்தை பொலிஸ்மா அதிபருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கின்றீர்கள். இப்போது மிருகக்காட்சி சாலையிலும் விலங்குகள் திருடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

நீங்கள் கடற்படைத் தளபதியை கைது செய்துள்ளீர்கள். விடுதலைப்புலி புலனாய்வில் இருந்த ஒருவர் வழங்கிய சாட்சிக்கமைய கைது செய்துள்ளீர்கள். குற்றப்புலனாய்வுக்கு

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# பெருந்தோட்ட மக்களுக்கான இந்திய வீட்டுத் திட்டத்தை முடிக்க அமைச்சின் நெருக்கமான ஒத்துழைப்பு தேவை

## இந்தியத் துணைத் தூதர் தெரிவிப்பு

இந்திய ஆளும்தரப்பின் நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பெருந்தோட்ட மக்களுக்கான 10 000 வீட்டுத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் உள்ளிட்ட சகல கட்டங்களையும் துரிதமாக நிறைவு செய்வதற்கு பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் நெருக்கமான மற்றும் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக இந்தியா தொடர்ந்தும் உறுதிபூண்டுள்ளதாக இலங்கைக்கான பிரதி உயராணையர் கலாநிதி சத்யஞ்சல் பாண்டே தெரிவித்தார்.

மலையகப்பிரஜைகளுக்கு மிகவும்பாதுகாப்பான வீடொன்றினை உரித்தாக்கல் திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று புதன்கிழமை கொழும்பிலுள்ள அரசாங்க தகவர் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் செயலாளர் பிரதி உயராணையர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய வீடமைப்பு திட்டம் இந்திய அரசினால் வெளிநாடுகளில் முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தி திட்டங்களில் பிரதானமானதாகும். 1835 கோடி இந்திய ரூபா பெறுமதியான நிதி உதவியுடன் இலங்கை பயனாளர்களுக்காக 60 000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருக்கின்றோம். இந்த வீட்டுத்திட்டத்தின் முதலிரு தொகுதிகளின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுமார் 46 000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டும், மீள் புனரமைக்கப்பட்டும் இருக்கின்றன. மூன்றாம் தொகுதியாக பெருந்தோட்டப் பகுதிகளில் 4000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவை பெரும்பாலும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

2017ஆம் ஆண்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் போது நான்காம் தொகுதியாக பெருந்தோட்ட மக்களுக்கு மேலும் 10 000 வீட்டுத்திட்டம் அறிவிக்கப்பட்டது. அவற்றில் முதற்கட்டமாக 1300 வீடுகளின் நிர்மாணப்பணிகளும் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன. அதன் இரண்டாம் கட்டம் தற்போது எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பதுளையில் அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இவ்விரண்டாம் கட்டத்தை ஆரம்பிப்பதற்காக பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் முன்னெடுப்புக்கள் மற்றும் ஒத்துழைப்புக்களுக்கு இந்திய அரசாங்கமும், இந்திய உயராணையரகமும் மதிப்பளிக்கின்றன.

வீடமைப்பு திட்டத்துக்கான தயாரிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்கள் மற்றும் அளவுகோள்களுக்கமைய பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட போது இந்த அமைச்சு அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. இரண்டாம் கட்டம் உள்ளிட்ட இந்திய வீட்டுத்திட்டத்தின் சகல கட்டங்களையும் துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு வீடுகளை அமைப்பதற்கான காணி ஒதுக்கீடு உள்ளிட்டவற்றை துரிதமாக நிறைவு செய்வதற்கு அமைச்சின் நெருக்கமான மற்றும் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். இந்திய வீட்டுத்திட்டத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் தொகுதிகளில் கட்டம் கட்டமாக நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த 14 000 வீடுகள் மூலம், இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் மேம்பாட்டுக்கான இந்திய ஆளும்தரப்பின் ஒத்துழைப்பை உறுதிப்படுத்துகிறது.

வீட்டுத்திட்டம் மாத்திரமின்றி பெருந்தோட்டப் பகுதிகளில் கல்வி, சுகாதாரம், சமூக பொருளாதார அபிவிருத்தியை கட்டியெழுப்புதல் என்பவற்றுக்கான வேலைத்திட்டங்களையும் இந்திய அரசு முன்னெடுத்து வருகிறது. அதற்கமைய இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு 2023 ஜீலையில் இடம்பெற்ற ‘மலையகம் 200‘ நிகழ்வில் அறிவிக்கப்பட்ட 75 கோடி இந்திய ரூபா பெறுமதியான விசேட அபிவிருத்தி வேலைத்திட்டப் பொதியும் இதில் உள்ளடங்குகிறது. பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை உருவாக்குவதற்காக நாம் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றோம்.

மக்களின்தேவைகள்மற்றும்இலங்கைஆளும்தரப்பின்தலைமையில் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களுக்கான இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பை மீண்டும் வலியுறுத்துகின்றோம். பதுளையில் இடம்பெறவுள்ள நிழ்வுக்காக பல்வேறு வழிகளிலும் இந்திய உயராணையரத்துடன் இணைந்து செயற்படும் பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு அமைச்சர், பிரதி அமைச்சர், செயலாளர் உள்ளிட்ட ஒட்டுமொத்த குழுவுக்கும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆளும்தரப்பின் ஒத்துழைப்புடன் இந்த திட்டத்தை துரிதமாக நிறைவு செய்ய எதிர்பார்க்கின்றோம் என்றார்.

# அம்பாந்தோட்டை இரட்டைக் கொலை சந்தேகநபர்கள் நால்வருக்கு மறியல்

அம்பாந்தோட்டை ஹுங்கம பகுதியில் வீடொன்றினுள் தம்பதியினர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் உட்பட நான்கு சந்தேகநபர்களை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹுங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாடிகல ரன்ன பகுதியில், உள்ள வீடொன்றினுள் செவ்வாய்க்கிழமை அதிகாலை வீட்டினுள் அத்துமீறி நுளைந்த ஐவர் அடங்கிய குழுவினர் வீட்டிலிருந்த தம்பதியினரை கூரிய ஆயுதத்தால் தாக்கி படுகொலை செய்திருந்தனர். சம்பவம் தொடர்பில் ஹுங்கம பொலிஸார் மற்றும் தங்காலை குற்ற விசாரணை பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் மேற்படி சம்பவம் தொடர்பில் பிரதேசவாசிகள் வழங்கிய தகவலுக்கமைய செவ்வாய்கிழமை குற்றச்செயலுக்கு உதவி ஒத்தாசை புரிந்த குற்றத்தின் பேரில் பெண் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 35 வயதுடைய பெண் ஒருவரும் 27 தொடக்கம் 33 வயதுடைய 3 மூன்று நபர்களும் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர்கள் ரன்ன பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களை கைதுசெய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். கைதான நபர்களிடமிருந்து குற்றச்செலுக்குப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் உள் நாட்டில் தயாரிக்கப்பட்ட போர் 12 ரக துப்பாக்கி, போர் 12 ரக 2 தோட்டாக்கள் மற்றும் ஒரு வெற்றுத் தோட்டாவும், 2 வெட்டு கத்திகளும் மீட்கப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டுள்ளதாக பிரதேச பரிசோதனையின் போது தெரியவந்துள்ளது. போதைப்பொருள் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட தகராறுகாரணமாக கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரு துப்பாக்கித் தோட்டாக்களும் குறித்த பெண்ணின் உடலத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன. மேலும் உயிரிழந்த நபர் கஹந்தமோதர பகுதியில் கடந்த வருடம் மார்ச் மாதம் நபர் ஒருவர் சுட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பிரதான சந்தேகநபராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை விசாரணையில் வெளிப்பட்டுள்ளது. இதேவேளை சந்தேகநபர்கள் நேற்று அங்குனுகொலபெலஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது

# அர்ஜுன மகேந்திரன் மீதான பயணத் தடையை நீக்கியது யார்?

## லஞ்ச, ஊழல் ஆணைக்குழு தலைவரிடம் சாமர சம்பத் எம்.பி. கேள்வி

2017ஆம் ஆண்டு அர்ஜுன மகேந்திரனுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடையை நீக்கியது யார், கோட்டை நீதிமன்ற நீதிபதியாக அப்போது பதவி வகித்தது யார் என்பதையும், தனது இரண்டாவது மனைவி மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனிடம் எந்த பதவியில் இருந்தார் என்பதையும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க குறிப்பிட வேண்டும் என்று புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுநடைபெற்றஅமர்வின்போது போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் 2025 குறைநிரப்புத் தொகை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தண்டனைச் சட்டக்கோவை திருத்தச் சட்டமூலத்தை இடைநிறுத்தியுள்ளதாக அரசுத் தலைவர் மகாநாயக்க தேரர்களிடம் குறிப்பிட்டுள்ளார். சட்டமூலத்தை இடைநிறுத்துவதாயின் ஏன் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்து விவாதித்து, காலத்தையும், அரச நிதியையும் வீணடித்தீர்கள்? இந்த சட்டமூலத்துக்கு எதிராக பெற்றோரும், ஆசிரியர்களும் கடும் அழுத்தம் கொடுத்ததால் ஆளும்தரப்பு இந்த சட்டமூலத்தை இடைநிறுத்தியுள்ளது.

இந்தசட்டமூலம்நாடாளுமன்றத்துக்குசமர்ப்பிக்கபட்டு விவாதிக்கப்படும் போது மொனராகலை பகுதியில் மாணவர்கள் ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள்., மாணவர்கள் கசிப்பு அருந்தியுள்ளார்கள், பாடசாலைக்கு மதுபானம் கொண்டு வந்துள்ளார்கள். அமைச்சரவை அமைச்சர் ஒருவரின் மகன் நேற்று (நேற்று முன்தினம்) பதுளை மகா வித்தியாலயத்தில் வைத்து சிகரெட் பிடித்து , ஆசிரியர்களிடம் பிடிப்பட்டுள்ளார். பிரதி அமைச்சரின் மகள் ஒருவர் தன்னை மாணவத் தலைவியாக தெரிவு செய்யவில்லை என்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளார். இதுதான் இன்றைய நிலை, தமது பிள்ளைகளை முதலில் திருத்திக் கொள்ளுங்கள் பின்னர் சட்டம் கொண்டு வரலாம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க பற்றி தற்போது பல விடயங்கள் பேசப்படுகிறது. இலங்கையில் பெரும் மோசடியாக பிணைமுறி கொடுக்கல் வாங்கல் மோசடி கருதப்படுகிறது. 2017ஆம்ஆண்டுஅர்ஜுனமகேந்திரனுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடையை நீக்கியது யார்? கோட்டை நீதிமன்ற நீதிபதியாக அப்போது பதவி வகித்தது யார் என்பதையும் ரங்க திஸாநாயக்க குறிப்பிட வேண்டும்.

ரங்க திஸாநாயக்கவின் முதலாவது மனைவி மத்திய வங்கியில் சேவையாற்றினார், இரண்டாவது மனைவியும் மத்திய வங்கியில் சேவையாற்றினார். இரண்டாம் மனைவி, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனின் கீழ் எந்தப் பதவியில் இருந்தார் என்பதையும் குறிப்பிடவேண்டும். நாட்டு மக்கள் இதனைத் தெரிந்துகொள்ளவேண்டும். தூய்மையானவர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் முதலில்தூய்மையானவர்களாகநடந்துகொள்ளவேண்டும்.

இந்த விடயத்தை நான் வெளிப்படுத்தியுள்ளேன். எனக்கு எதிராக உள்ள மூன்று வழக்குகளுக்கும் அவர் நிச்சயம் வெகுவிரைவில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்வார் என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறேன் என்றார்.

# ஆளும்தரப்பின் வரி நீக்கத் தீர்மானம் பற்றி ஐரோப்பிய ஒன்றியத்திடம் சஜித் தெரிவிப்பு

ஆளும்தரப்பு இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையை (றீபுவீ) இடைநிறுத்த எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் தலைமையிலான விசேட பிரதிநிதிகள் குழுவுடனான சந்திப்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ ஆகியோருக்கிடையில் நேற்று புதன்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

போட்டி விதிமுறைகளுக்கு இணங்குதல், தற்போதைய ஆளும்தரப்பு இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையை இடைநிறுத்த எடுத்து வரும் நடவடிக்கைகள், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையாளர்கள் எதிர்கொள்ளும் பல சவால்கள் தொடர்பில் இந்த சந்திப்பின்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இங்கு தனிப்பட்ட, நட்பு ரீதியான கலந்துரையாடலுக்குப் பிறகு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் கார்மென் மொரேனோ மற்றும் கலாநிதி ஹெஸ்ஸுடன் இணைந்து, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாண்மை துறையைச் சேர்ந்த வணிக முயற்சித் தலைவர்களுடனான சந்திப்பிலும் கலந்துகொண்டார்.

இதன் ஊடாக, உள்நாட்டு தொழில்முனைவோர் எதிர்கொள்ளும் சவால்களை ஐரோப்பிய ஒன்றிய தூதுரிடம் நேரடியாக முன்வைக்க இது ஓர் அரிய வாய்ப்பாக அமைந்ததாக எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொழில் வியாபார முயற்சியாண்மை நடவடிக்கைகளுக்கு சமமான சூழலை உருவாக்குதல், கொள்கை ரீதியிலான இணக்கத்தை உறுதி செய்தல், இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபுணத்துவ ஒத்துழைப்பு மற்றும் போட்டித்தன்மையை ஆதரிப்பதற்கான வழிகளை ஆராய்வது என்பன தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையிலான இந்த கலந்துரையாடலில் முதன்மையாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆபத்தான அறிகுறி

**இலங்கையின் கல்வி துறையில் ஒரு ஆபத்தான நிழல் பரவி வருகிறது. அதாவது, பள்ளி மாணவர்களில் அதிகமானோர் மனஉளைச்சலால் (mental stress) பாதிக்கப்படுகிறார்கள் என்பதே அதிர்ச்சித் தகவல். சமீபத்தில் வெளியிடப்பட்ட உலக மாணவர் நல ஆய்வு (Global Student Health Survey 2024) முடிவுகளின்படி, இலங்கையில் 13 முதல் 17 வயதுக்கிடையிலான மாணவர்களில் ஆறில் ஒருவர் மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளார். இது ஒரு எளிய புள்ளிவிவரம் மட்டும் அல்ல; கல்வி அமைப்பின் அடித்தளத்தையே கேள்விக்குறியாக்கும் எச்சரிக்கை.**

### மறைந்திருக்கும் நெருக்கடி

**அந்த ஆய்வில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது — மாணவர்களில் 22 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் "தனிமை உணர்வில்" வாழ்கிறார்கள். 12 சதவீதத்திற்கும் அருகில் உள்ளோர் தூக்கக் குறைபாட்டால் அவதிப்படுகிறார்கள். பலர் "யாரிடமும் தமது பிரச்சினையை பகிர்ந்து கொள்ள முடியாது" என்று கூறியுள்ளனர். இதன் பொருள், வகுப்பறைகளில் சிரித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் பலரும் உள்ளுக்குள் ஒரு கடுமையான போராட்டத்தைச் சந்தித்து வருகிறார்கள்.**

**மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பாடங்களில் கவனம் செலுத்த முடியாமல், மதிப்பெண்களில் வீழ்ச்சி காணப்படுவது இயல்பாகும். அதோடு, நண்பர்களிடமிருந்து விலகல், குடும்பத்துடன் தகராறு, எதிர்காலம் குறித்த பயம், தற்கொலை எண்ணம் போன்ற ஆபத்தான விளைவுகளும் உருவாகின்றன. இது ஒரு தனிப்பட்ட மாணவனின் சிக்கல் அல்ல; இது நாட்டின் எதிர்காலத்தின் சிக்கல் ஆகும்.**

### காரணங்கள் — அழுத்தத்தின் சங்கிலி

**இன்று மாணவர்கள் ஓய்வின்றி ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.**

**கல்வி அழுத்தம் — தேர்வுகள், மதிப்பெண்கள், பெற்றோரின் எதிர்பார்ப்பு ஆகியவை ஒரு பெரும் மனச்சுமையாக மாறியுள்ளன.**

**தனிப்படிப்பு கலாசாரம் — பள்ளி முடிந்த பின் கூட, வகுப்பறைகள் மாறி 'ட்யூஷன்' மையங்களில் மாணவர்கள் சிக்கியுள்ளனர்.**

**குடும்பப் பிரச்சினைகள் — பொருளாதார சிக்கல்கள், பெற்றோர் உறவுகள், கவனக்குறைவு ஆகியவை குழந்தையின் மனநலனை பாதிக்கின்றன.**

**சமூக ஊடகப் பிரச்சினைகள் — இணையத்தில் நடக்கும் ஒப்பீடு, பொய்யான வெற்றிக் கதைகள், விரைவான தீர்ப்புகள் மாணவர்களின் மனத்தில் குறைபாடு உணர்வை விதைக்கின்றன.**

**ஆதரவு இல்லாமை — பல மாணவர்கள் தங்களின் மனநிலையை யாரிடமும் பகிர முடியாத தனிமையிலே வாழ்கின்றனர்.**

### தீர்வுகள் — நமது பொறுப்பு

**இந்தப் பிரச்சினை குறித்து பேசுவதில் மட்டுமே முடிந்துவிட முடியாது. செயல் அவசியம்.**

**ஒவ்வொரு பாடசாலையிலும் மனநலம் ஆலோசகர்கள் (school counsellors) நியமிக்கப்பட வேண்டும்.**

- **மனநலக் கல்வி பாடத்திட்டத்தில் இணைக்கப்பட வேண்டும்.**

**மாணவர்கள் திறந்த மனதுடன் பேசும் சூழல் — 'நண்பர் குழுக்கள்', 'பேச்சு வட்டங்கள்' போன்றவை ஊக்குவிக்கப்பட வேண்டும்.**

- **அவசர உதவி தொலைபேசி சேவைகள் வலுப்படுத்தப்பட வேண்டும்.**
- **பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மனநிலை அறிதல் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.**
- **இவை மேற்கொள்ளப்படாவிட்டால், இன்றைய மாணவர்கள் நாளைய சமுதாய சுமையாக மாறும் அபாயம் உள்ளது.**

### தொடங்கவேண்டிய மாற்றம்

**மாணவர்களின் மனநலம் என்பது கல்வியின் ஒரு துணை அம்சம் அல்ல — அது கல்வியின் அடித்தளம். நம் பாடசாலைகள் மதிப்பெண்களை மட்டுமே கற்பிக்கும் இடங்களாக மாறிவிட்டன; ஆனால் "மன அமைதி" கற்பிக்கும் இடமாக மாறவில்லை.**

**மாணவர்கள் இன்று சிரித்துக் கற்கவேண்டிய வயதில் அழுத்தத்தால் தளர்ந்திருப்பது, நம் சமூகத்தின் தோல்வி. இது அரசாங்கத்தின் பொறுப்பாகவும், பள்ளி நிர்வாகத்தின் கடமையாகவும், பெற்றோரின் கடன் கடமையாகவும் மாறுகிறது.**

**மாணவர்களின் மனம் தளர்ந்தால், நாட்டின் எதிர்காலம் தளரும். எனவே, இன்றே நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நாளை அது மிகவும் தாமதமாகிவிடும்.**

**நம் பாடசாலைகள் புத்தக அறிவின் கோட்டைகளாக அல்லாமல் — மன அமைதியின் தாயகங்களாகவும் மாறவேண்டும்.**

# மகிந்தவின் ஊடகச் செயலருக்கு பெரமுன கட்சியில் திடீர் பதவி

ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மொரட்டுவ தொகுதி அமைப்பாளராக சட்டத்தரணி மனோஜ் கமகே நியமனம்

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மொரட்டுவ தொகுதி அமைப்பாளராக, முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஊடகச் செயலாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனக் கடிதம் நேற்று பத்தரமுல்லை, நெலும் மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை பொதுஜன முன்னணியின் பிரதான கட்சி அலுவலகத்தில் வைத்து, அதன் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவினால் வழங்கப்பட்டது.

# சிறைகளில் 35 ஆயிரம் கைதிகள்

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் இன்றளவில் (2025.09.23 ஆம் திகதி வரையான காலப்பகுதி) நீதிமன்றத்தால் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட 10509 கைதிகளும், சந்தேகத்தின் அடிப்படையில் 24, 256 கைதிகளும் என்ற அடிப்படையில் மொத்தமாக 34,765 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது தேசிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மப்பிரிய முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் இன்றளவில் (2025.09.23 ஆம் திகதி வரையான காலப்பகுதி) நீதிமன்றத்தால் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட 10509 கைதிகளும், சந்தேகத்தின் அடிப்படையில் 24,256 கைதிகளும் என்ற அடிப்படையில் மொத்தமாக 34765 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலைகளில் 20 ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டதன் பின்னர் எந்த கைதிகளும் விடுவிக்கப்படவில்லை. அவ்வாறான சட்ட ஏற்பாடுகள் ஏதும் கிடையாது. நீதிமன்றத்தால் மரண தண்டனை, ஆயுள்தண்டனை மற்றும் குறித்த காலத்தை வரையறுத்து தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகள் சிறைச்சாலைகளில் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை கைதிகளை தவிர்த்து குறுகிய காலம் என்ற அடிப்படையில் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகளுக்கு சிறைச்சாலை சட்டத்தின் 302 பிரிவின் பிரகாரம் தண்டனை காலம் குறைக்கப்படுகிறது. அதுவும் நீதிமன்றத்தின் வழிகாட்டலுக்கு அமைவாகவே இடம்பெறுகிறது.

சிறைக்கைதிகளைத் தவிர அபராதம் செலுத்த முடியாமல் நீண்ட காலமாக சிறைச்சாலைகளில் 2122 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விடயத்தில் நியாயமான மற்றும் முறையான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

அரசியலமைப்பு சட்டத்தின் 34 பிரிவின் பிரகாரம் அரசுத்தலைவர்க்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய சிறு குற்றங்கள் மற்றும் அபராதம் விதிக்க முடியாமல் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளில் சட்ட வழிமுறைகளுக்கு அமைய தெரிவு செய்யப்பட்ட கைதிகளுக்கு விசேட தினங்களில் பொது மன்னிப்பு வழங்கப்படுகிறது.

சிறைக்கைதிகளும் மனிதர்களே என்பதை பேச்சளவில் மாத்திரம் குறிப்பிட முடியாது. சிறைச்சாலைகளுக்குள் கைதிகள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்வது காலம் காலமாகவே குறிப்பிடப்படுகிறது. முறையற்ற வகையில் செயற்படும் சிறைச்சாலை அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# தொண்டமானாறு தடுப்பணையினால் பாதிக்கப்பட்டோருக்கு தீர்வுவேண்டும்

## வலி. கிழக்கு சபைத் தவிசாளர் நிரோஷ் கோரிக்கை




தொண்டமானாறு உவர்நீர்த்தடுப்பணையினால் வருடாவருடம் வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்ளும் மக்களைக் காப்பாற்றுவதற்கான நிலைத்தகு திட்டத்தினை மாகாண நிதி ஒதுக்கீடுகளுக்குள்ளாகவோ அல்லது பன்னாட்டு அமைப்புக்களின் ஒத்துழைப்புடனோ நிறைவேற்றுமாறு வடமாகாண ஆளுநர் வேதநாயகத்திடம் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் நிரோஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடன் ஆளுநர் நடத்திய சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. நிரோஷ் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் நிலத்தடி நீரை பாதுகாப்பதற்கான பெரும் அர்ப்பணிப்பினை வலிகாமம் கிழக்குப் பிரதேசமே மேற்கொள்கின்றது. தொண்டமானாறு மற்றும் செம்மணி நீரேரிகள் எமது ஆட்சிப் பகுதிக்கு உட்பட்டவை. நிலத்தடி நீரைப்பாதுகாப்பதற்கான உவர் நீர்த்தடுப்புத் திட்டம் இங்கு செயற்படுத்தப்படுவதனால் எமது மக்களில் ஆயிரக்கணக்கானவர்கள் வெள்ளப்பாதிப்பினை எதிர்கொள்கின்றார்கள். அவ்வாறாக மக்கள் பாதிக்கப்படும் போதும் மக்களை நாம் நிலத்தடி நீர்ப்பாதுகாப்புத்திட்டம் என்ற ஒரே காரணத்திற்காக பாதிப்புக்களை சகித்துவாழ பல அரசகட்டமைப்பு கோருகின்றது.

நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் திட்டத்துடன் இணைந்த உப திட்டங்கள் வகுக்கப்பட்டு அதன்வாயிலாக மக்களை வெள்ளப்பாதிப்பில் இருந்து நாம் பாதுகாக்கவேண்டும். அவ்வாறான திட்டங்கள் நிலைத்தகு சிந்தனையுடன் நடைமுறைப்படுத்தப்படும் போது மக்கள் எதிர்கொண்டுள்ள வெள்ளப்பாதிப்பிற்கு தீர்வு காணலாம். ஒவ்வொரு வருடமும் அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, ஆவரங்காலின் ஒருபகுதி, வாதரவத்தை, புத்தூர் கிழக்கு என வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தின் பல பகுதி வெள்ளப்பாதிப்பிற்கு உள்ளாகின்றது. இதில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடர்நிலையை எதிர்கொள்கின்றனர். இவ்வாறான நிலையில் மாகாணசபைகூட தனது குறித்தொதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் கீழ் மேற்படி மக்களுக்கு சிறந்த திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி மக்களின் பாதிப்புக்களைக் குறைக்கலாம். அதற்கு ஏனைய உள்ளூராட்சி மன்றங்களும் தமது பகுதிக்கும் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் திட்டம் நன்மையளிக்கின்றது என்ற அடிப்படையில் நிதிகள் மாகாண மட்டத்தில் பகிரப்படும் போது விட்டுக்கொடுப்புக்களைச் செய்யமுடியும். மேலும் உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச கொடையாளர்களிடம் மேற்படி உவர் நீர்த் தடுப்பணை நன்னீர்த்திட்டத்தினை பேணுவதனால் பாதிக்கப்படும் மக்களுக்கான பாதிப்பை நிவர்த்தி செய்யத்தக்க திட்டத்தினை மேற்கொள்ள நிதி கோரிக்கையினை ஆளுநர் அவர்கள் முன்வைக்கவேண்டும் என தவிசாளர் கோரிக்கை விடுத்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# அக்கரைப்பற்று பிரதேசத்தில் கஞ்சாவுடன் இருவர் கைது

(றிபாஸ்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காதரியா கடற்கரை பிரதேசத்தில் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இராகசிய தகவலுக்கு அமைய பொலிஸார் குறித்த பிரதேசத்திற்குச் சென்று சந்தேகநபர்களைக் கைது செய்தனர். ஒருவர் விற்பனைக்காக வைத்திருந்த 18 .89 கிராம் கேர்ளா கஞ்சாவையும் மோட்டார் சைக்கிளையும் தாம் கைப்பற்றினர் எனவும் மற்றைய சந்தேகநபரிடமிருந்து மூன்று கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை ஒக்டோபர் 21 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். மேலதிக விசாரனைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனை இஸ்லாமாபாத் வித்தியில் உலக ஆசிரியர் தின நிகழ்வு நேற்று

(நூருல் ஹுதா)




கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் உலக ஆசிரியர் தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த ஆசிரியர் தினத்தில் பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம். றிசாத் அவர்கள் உட்பட அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களாலும், பெற்றோர்களாலும் மாலை அணிவித்து பூச்செண்டு வழங்கி சிறந்த முறையில் கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது ஆசிரியர்களின் கலை, கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# கொத்மலை ஓயாவில் நேற்று உருக்குலைந்த சடலம் மீட்பு



(கிஷாந்தன்)

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு நீர் ஏந்திச் செல்லும் கொத்மலை ஓயாவில் அடையாளம் தெரியாத நபர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன்-நுவரெலியா பிரதான வீதியின் லிந்துலை பகுதியில் கொத்மலை ஓயாவில் சடலம் ஒன்று மிதந்து கொண்டிருப்பதாக பொலிஸாருக்கு பொது மக்களால் தகவல்வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொலிஸாரால் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. நுவரெலியா நீதிவான் சம்பவ இடத்திற்கு வந்து பரிசோதித்த பின்னர், சடலம் உடற்கூறாய்வுக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் சிறப்பு தடயவியல் வைத்தியரிடம் சடலம் ஒப்படைக்கப்படும் என லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

# தேசிய மட்டத்திற்கு முன்னேறிய சாய்ந்தமருது கலாசார நிலையத்தினர்

(ஸாகிர்)



கலாசாரஅலுவல்கள்அமைச்சினால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் பிரதீபா - 2025 மாகாண மட்டப் போட்டியில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு முன்னேறி சாதனை நிலைநாட்டியுள்ளனர்.

இம்முறைமருதமுனைஸம்ஸ்மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த போட்டிகளில் சுமார் 15 க்கு மேற்பட்ட மத்திய நிலையங்கள் பங்குபற்றியிருந்தன. அதில் முஸ்லிம் பிரிவில் சுமார் 07 மத்திய நிலையங்கள் கலந்து கொண்டன.

இந்த கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் கலந்து கொண்ட கோலாட்டம் கனிஷ்ட நிகழ்ச்சியில் 90 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுசாய்ந்தமருதுக்கு பெருமை சேர்க்கும் வகையில் வெற்றிபெற்றுள்ளனர்.

இது சாய்ந்தமருது வரலாற்றில் எழுதப்பட வேண்டிய பாரியதொரு வெற்றியாகும். ஏனெனில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் திறந்து குறுகிய காலப்பகுதியில் மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த மத்திய நிலையங்களை வீழ்த்தி இவ்வெற்றிச் சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

இந்த வெற்றியில் பங்கு கொண்ட கோலாட்டப் பிரிவின் சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களான சல்பி, நப்லான், றினாஸ், அப்றி, ஆபித், கம்ரான் அஹ்மத், மாயிஸ், அஹ்திர் ஆகியோரும் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் மாணவர்களான றிவி, ஸராப், ஹாதீம் மற்றும் இவ்வெற்றிக்கு பின்புலமாய் இருந்து செயற்பட்ட சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஆசிக் மற்றும் கலாசார மத்திய நிலையத்தில் இம் மாணவர்களைப் பயிற்றுவித்த வளவாளர்களான, சிரேஷ்ட அண்ணாவியார் இஸ்ஸதீன், அமீர் (ஆசிரியர்), பொல்லடி பயிற்றுவிப்பாளர் ஊடகவியலாளர் ஸாகிர்

உட்படவெற்றிக்காகப்பங்குபற்றிபாடுபட்டஅனைவருக்கும் கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி நௌசாத், வாழ்த்துக்களோடு பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

● CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
● NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
● வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
● ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
● GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

## ஜெனிவாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றவாறுவாக்குமூலங்கள்பதியப்படுகின்றன. இவ்வாறான நிலைமையிலேயே பொலிஸ் ஆணைக்குழுவை நீக்கி பொலிஸ்மா அதிபரின் கீழ் அதிகாரங்களை கொண்டுவந்து ஆளும்தரப்பின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்கப்படுகின்றது.

பொலிஸ்மா அதிபர் சில விடயங்களை புரிந்துகொள்ள வேண்டும். அதாவது கடந்த காலங்களில்அரசாங்கத்திற்காககடைக்குசென்ற பொலிஸ்மா அதிபர்களுக்கு என்ன நடந்தது என்று சிந்திக்க வேண்டும். பொலிஸாரை பயன்படுத்தி தமது அரசியல் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றிக்கொள்ளவே ஆளும்தரப்பு முயற்சிக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை காரியாலயத்தில் எடுக்கும் தீர்மானங்களுக்கு அமைய பொலிஸ் சேவை மாற்றியமைக்க கூடாது.

1980 மற்றும் 1990 ஆம் காலங்களில் இதுபோன்ற நிலைமை இருந்தது. ஆனால் அது தற்போது பொருத்தமாகாது என்பதை குறிப்பிட்டுக்கொள்கிறேன். பொலிஸாரை பயன்படுத்தி அரசியல் செய்ய முடியாது. தயவு செய்து பொலிஸை அரசியல்மயமாக்குவதை நிறுத்துங்கள். பொலிஸ் ஆணைக்குழுவின் கௌரவத்தை சீர்குலைக்க வேண்டாம் என்று கோருகின்றோம்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் இலங்கை விவகாரம் தொடர்பில் வாய்மூலம் எதிர்ப்பு தெரிவித்த போதும் வாக்கெடுப்பை கோரவில்லை. வாக்கெடுப்பை கோருவதற்கு அரசாங்கத்திற்கு முதுகெலும்பு இல்லையா? நாடுகள் பல இலங்கைக்கு ஆதரவாக உள்ளன. யாரை நீங்கள் மகிழ்விக்கப் போகின்றீர்கள்.? புலம்பெயர்தமிழ்அமைப்புக்களையா, அல்லது விடுதலைப் புலி ஆதரவாளர்களையா? .ஐ.நா.விவகாரத்தில் இரட்டை வேடம் அணிவதை ஆளும்தரப்பு தவிர்க்க வேண்டும் என்றார்.

## ஜெனீவாத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தில் பிரதமரிடம் கேள்விகளை முன்வைத்தார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்.

ஐ.நாமனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் வருடாந்த கூட்டத்தொடரில் மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு முன்னர் மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட விஜயத்தின் இறுதியில் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டு இலங்கை ஆளும்தரப்பு பல்வேறு துறைகளில் கவனம் செலுத்தப்பட வேண்டிய மற்றும் செயற்படுத்தப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.இவற்றைஅடிப்படையாகக் கொண்டு பிரதமரிடத்தில் சில கேள்விகளை முன்வைக்கின்றேன்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் ஆளும்தரப்பின் நிலைப்பாடு மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கும் நடவடிக்கை தொடர்பில் இந்த சபையில் தெளிவுப்படுத்த முடியுமா?

மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை தனித் தனியாக முன்வைத்து, அந்த பரிந்துரைகளை செயற்படுத்துவதற்காக ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்குமா?

மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் வேறு சர்வதேச மாற்று யோசனையை பயன்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்கான பரிந்துரை தொடர்பில் ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்ன? என்று கேள்வியெழுப்பினார்.

இதன்போது எழுந்து பதிலளித்த கலாநிதி பிரதமர் ஹரிணி

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் , இதற்கு முன்னர் வேறு கேள்விகளையே பிரதமரிடத்திலான கேள்வியில் கேட்டிருந்தார். அதற்காகவே நான் தயாராக இருந்தேன். ஆனால் இந்த புதிய கேள்விகள் நேற்றைய தினமே (செவ்வாய்க்கிழமை) கிடைத்தது. இதனால் இதற்கு பதிலளிக்க இரண்டு வார கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இவ்வேளையில் மீண்டும் எழுந்த சாணக்கியன், பிரதமர் தயாராக வந்த கேள்விகளுக்கு வேண்டுமென்றால் பதிலளிக்குமாறு கேட்கின்றேன். நான் அனுப்பியிருந்த கேள்விகளை நாடாளுமன்றத்தில் கொள்கைகள் தொடர்பில் கேட்க முடியும் என்று கூறியதால் அந்த கேள்விகளை மாற்றினேன் என்றார்.

இதன்போது ஆளும் கட்சி பிரதம கொறடாவான நளிந்த ஜயதிஸ்ஸ, பிரதமரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கே அவர் பதில்களை தயாரிக்கவேண்டும். அவர் கேள்விகளுக்கு பதில்களைதயார்படுத்திக்கொண்டிருந்தபோது, கேள்விகளை மாற்றியுள்ளீர்கள். புதிய கேள்விகளை முன்வைத்துள்ளமையினால் அடுத்த பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தில் பதிலளிப்பார். எவ்வாறாயினும் அயலுறவுத்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில்உரையாற்றுவார்என்றார்.

இவ்வேளையில் மீண்டும் எழுந்த சாணக்கியன், நான் முதலில் கொடுத்த கேள்விகளை மீளப்பெற்றுக்கொண்டு வேறு கேள்விகளை வழங்கியதாக கூறுவது தவறான நிலைப்பாடாகும். நான் முதலில் வழங்கிய கேள்விகள் நிலையியல் கட்டளைக்கு அமைய மாற்ற வேண்டும் என்று கூறியதால் நான் மாற்றினேன். நான் எழுதிக்கொடுத்த கேள்விகளை மாற்றவில்லை. ஏன் அரசாங்கத்தால் இதற்கு பதிலளிக்க விருப்பமில்லை என்று புரிகின்றது.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் ஆளும்தரப்பு எடுத்த நிலைப்பாடு தொடர்பில் அரசாங்கத்தால் பதிலளிக்க முடியாது. இது முக்கியமான பிரச்சினையாகும். சர்வதேசம் பார்த்துக்கொண்டு இருக்கின்றது. வேலைகள் செய்யாமல் வாக்குறுதிகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படும் நேரத்தில் இந்தக் கேள்விகளில் பிரச்சினை இருப்பதாக கூறுவது கேள்வியில் இருந்து நழுவிச் செல்வதாகும். இது அநீதியானது என்றார்.

இதன்போது மீண்டும் பதிலளித்த ஆளும் கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,நாங்கள் கேள்வியில் இருந்து நழுவிச் செல்லவில்லை. இது தொடர்பில் அயலுறவுத்துறை அமைச்சர் உரையாற்றுவார் என்றார்.

## எல்லை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவாக மாகாணசபைத்தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள புதிய தீர்மானம் குறித்தும், அதற்கு முன்பதாகவே மாகாண சபைத் தேர்தல்கள் விரைவாக நடத்தப்படவேண்டியதன் அவசியம் குறித்து பேரவையில் இந்தியா வலியுறுத்தியமை குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதன்படி மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இதன்போது கருத்துரைத்த உயராணையர் சந்தோஷ் ஜா, அத்தேர்தலை எல்லை நிர்ணயம் செய்த பின்னர் நடத்துவதா அல்லது எல்லை நிர்ணயம் செய்யாமல் நடத்துவதா என்பது பற்றி ஆளும்தரப்பு இன்னமும் தீர்மானிக்கவில்லை போல் தெரிவதாகவும், இருப்பினும் மாகாண சபைத்தேர்தல்கள் இயலுமானவரை விரைவில் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கையில் இந்திய முதலீடுகள், பலாலி மற்றும் காங்கேசன்துறை உள்ளடங்கலாக இருநாடுகளுக்கும் இடையிலான இடைத்தொடர்புசார் விடயங்கள், தலைமன்னார்-இராமேஸ்வரம் போக்குவரத்து இணைப்பின் தற்போதைய நிலவரம் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பிலும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

## வதந்திகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவில் விமானசேவைகள் அமைச்சின் 2025 குறைநிரப்புத் தொகை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சுக்களில் இடம்பெற்ற ஊழல் மோசடியால் மக்களுக்கான அபிவிருத்தி சேவைகள் கடந்த காலங்களில் இடைநிறுத்தப்பட்டன. இதனால் மக்கள் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தார்கள். அவ்வாறான நிலை எமது அரசாங்கத்தில் ஏற்படாது. சகல அமைச்சுக்களும் வெளிப்படைத்தன்மையுடன் மக்களுக்காக செயற்படுகின்றன.

பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்குவற்கு சகல அமைச்சுக்களும் வினைத்திறனாக செயற்படுவதற்கு உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ஆகவே சகல அமைச்சுகளும், அரச நிறுவனங்கள், திணைக்களங்களும் மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும்.

மக்களுக்கான பொது சேவையில் பொதுப்போக்குவரத்து சேவை பிரதான ஒன்றாக காணப்படுகிறது. அரச மற்றும் தனியார் பேருந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பொதுபயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார்கள். ஆனால் அவ்வாறான நிலைமை அண்மை காலங்களில் இல்லாமல் போயுள்ளது. பொது பயணிகளுக்கும், அரச பேருந்துகளுக்கும் இடையிலான நல்லதொரு உறவை மீண்டும் கட்டியெழுப்ப போக்குவரத்து அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எமது கட்சியில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் மற்றும் எடுக்கப்படும் தீர்மானங்கள் பற்றி பலர் பல விடயங்களை குறிப்பிடுகிறார்கள். அவையனைத்தும் வதந்திகள் என்று குறிப்பிட்டுக் கொள்கிறேன். அத்துடன் வதந்திகளுக்கு பதிலளிக்க போவதில்லை.

அனைத்து நாடாளுமன்றங்களிலும் நகைச்சுவையாளர்கள் இருந்துள்ளார்கள். இந்த நாடாளுமன்றத்திலும் எதிர்க்கட்சியில் நகைச்சுவையாளர்கள் உள்ளார்கள். அவர்கள் குறிப்பிடும் விடயங்களை கேட்டு கோபமடைய போவதில்லை. மகிழ்ச்சியடையோம் என்றார்.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவுமாறு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களாலும், புலம்பெயர் தமிழர்களாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கை முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் இலங்கையில் சமத்துவம் மற்றும் விடுதலைக்கான மக்கள் அமைப்பு கடும் விசனம் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் குறித்து வொஷிங்கடனைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் புலம்பெயர் தமிழர் அமைப்பான இலங்கையில் சமத்துவம் மற்றும் விடுதலைக்கான மக்கள் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை குறித்து புதிய தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தின் ஊடாக இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையர் அலுவலகத்துக்கும், இலங்கை குறித்த பொறுப்புக்கூறல் செயற்திட்டத்துக்கும் வழங்கப்பட்டிருந்த ஆணை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கின்றது. அதன்மூலம் இலங்கை அரசினால் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் மற்றும் இனவழிப்பு உள்ளிட்ட மிகமோசமான குற்றங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் வழக்குத்தொடர்வதற்கு அவசியமான ஆதாரங்களை சேகரிப்பதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும், அவற்றை உரியவாறு பேணுவதற்குமான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இருப்பினும் இலங்கை அரசு மீண்டுமொரு முறை இத்தீர்மானத்தை நிராகரித்திருக்கின்றது.

இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறைகாலநீடிப்புசெய்யப்பட்டிருப்பதை வரவேற்கும் அதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்புநாடுகளின் இலங்கை ஆளும்தரப்பு தொடர்பான மென்போக்கான (மிகக்கவனத்துடனான) அணுகுமுறை குறித்து தீவிர கரிசனை அடைகின்றோம். அத்தோடு இத்தீர்மானமானது இலங்கையில் இடம்பெற்ற குற்றங்களினதும், தற்போது இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களினதும் பாரதூரத்தன்மையைப் பிரதிபலிப்பதற்கும், தமிழ்மக்கள் மிகமோசமான இழப்புக்களுக்கு முகங்கொடுத்தமையை அங்கீகரிப்பதற்கும் தவறிவிட்டது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இடம்பெற்று 16 வருடங்கள் கடந்துள்ள நிலையில், தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சர்வதேச சட்டங்களுக்கு முரணான பாரிய குற்றங்கள் தொடர்பில் இதுவரை எவரும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. மாறாக மிகையான இராணுவமயமாக்கம், தொடர் காணி சுவீகரிப்பு, வட- கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்களில் பௌத்த விகாரைகளை நிர்மாணித்தல், அரச கட்டமைப்புக்குள் சிங்கள பௌத்த பேரினவாதத்தை உட்புகுத்தல் உள்ளிட்ட கட்டமைக்கப்பட்ட மீறல்கள் அரசாங்கத்தினால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதுமாத்திரமன்றி பாதுகாப்புப்படையினரால் தமிழர்களுக்கு எதிராக அத்துமீறல்கள், ஒடுக்குமுறைகள் மற்றும் வன்முறைகள் என்பன கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

இவற்றுக்குமத்தியில் சர்வதேசசமூகமானது நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்ட தரப்பினருக்குத் தீர்வை வழங்காமல், பொறுப்புக்கூறலில் இருந்து குற்றவாளிகளைப் பாதுகாக்கும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் போன்ற உள்ளகக்கட்டமைப்புக்களை தொடர்ந்து ஊக்குவித்து வருகின்றது. சர்வதேச நீதிப்பொறிமுறையை நிறுவுமாறு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களாலும், புலம்பெயர் தமிழர்களாலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கை முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் தமிழர்களுக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் தீர்வு என்பன இன்றி நியாயமான நல்லிணக்கம் சாத்தியமில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றோம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# கற்பிட்டி அல் அக்ஸாவில் ஆசிரியர் தின நிகழ்வுகள்

(சியாஜ்)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கற்பிட்டி அல் அக்ஸாவில் கற்ற 2002ஆம் ஆண்டு சாதாரண தர பரீட்சை எழுதிய

மாணவர்களின் ஏற்பாட்டில் தங்களுக்கு கற்பித்து ஓய்வு பெற்றுள்ள ஆசிரியர்களை கௌரவிக்கும் முகமாக ஒக்டோபர் 06 இரவு சிறப்பு ஒன்றுகூடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

புதுமையான பாராட்டக்கூடிய நிகழ்வாக அமைந்த மேற்படி ஏற்பாட்டில் அன்றைய மாணவப் பருவ நினைவலைகள் மீட்டி பார்க்கப்பட்டது. இவ்வாறு ஓய்வுபெற்ற ஆசிரியர்களும் ஆசிரியர் தினத்தன்று கௌரவிக்கப்பட்ட வேண்டும் என்ற நற்ச் செய்தியையும் தெரிவித்ததுடன் ஆசிரியர்களுக்கான இரவு போசணமும் வழங்கப்பட்டது.




# கற்பிட்டி நகர எல்லையின் ஏ-7 வீதியில் 643 கி. பீடி இலைகளுடன் இருவர் கைது

(சியாஜ்)

கற்பிட்டி நகர எல்லையின் ஏ-7 பாதையில் இலங்கை கடற்படையினர் செவ்வாய்க்கிழமை நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின்போது, சட்டத்திற்குப் புறம்பாக நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு, வேறிடத்திற்குக் கடத்த முற்பட்ட சுமார் 643 கிலோ கிராம் பீடி இலைகளை ஏற்றிச் சென்ற கெப் ரக வாகனத்துடன் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் விஜயவிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், நடத்தப்பட்ட இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது, கற்பிட்டி நகர எல்லைக்குள் உள்ள ஏ-7 பாதையில் சோதனை நடத்தப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 37 மற்றும் 41 வயதுடையவர்கள். தலவில் மற்றும் பாலாவி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



சந்தேகநபர்கள், கெப் வாகனம் மற்றும் பீடி இலைகளை என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மதுவரி திணைக்கள சிறப்புப் பிரிவிடம் ஒப்படைக்கபட்டுள்ளன.

# கீரிமுந்தல் திருச் சிலுவைநாதரின் வருடாந்தத் திருவிழா ஞாயிறன்று

(சியாஜ்)

கற்பிட்டி டச்பே கிராம உத்தியோகத்தர் பிரிவில் உச்சமுனை எனும் தீவில் வெள்ளைக்கார குடா எனும் இடத்தில் இரு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவாக கீரிமுந்தல் காணப்படுகின்றது. 1811 ஆம் ஆண்டு இவ் ஆலயம் கட்டப்பட்ட கீரிமுந்தல் திருச் சிலுவை ஆலயத்தின் வருடாந்த திருவிழா ஒக்டோபர் 05 மறைகோட்ட முதல்வர் அருட்தந்தை மைக்கல் கனீஸியஸ் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது

மேலும் பங்குதந்தை எண்டன் நிரோஷன் அடிகள், உச்சமுனை பங்குதந்தை ஜொய்ஸ்டஸ் அடிகள், உதவி பங்குதந்தை கிருஷாந்த் அடிகள், கீரிமுந்தல் மண்ணின் அருட் சகோதரி சிந்தாத்திரி நலனிஆகியோருடன்இன்னும்பலபங்குதந்தைகள், அருட்சகோதரிகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.10.2025இல் வெளியிடப்பெற்றது